DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.135/2022**

**prosecution witness: Pw 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிகுமார் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**25.05.2023**

முதல் விசாரணை:-

1. நான் இராமேஸ்வரத்தில் வசித்து வருகிறேன்.செங்கல், சிமெண்ட் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 13.01.2022-ம் தேதி தங்கச்சிமடத்தில் உள்ள மங்கள தீர்த்தத்திற்கு எதிரே விபத்து நடந்தது . அப்போது தங்கச்சிமடம் காவல் சார்பு ஆய்வாளர் விபத்து நடந்த இடத்தை படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் என்னை சாட்சியாக கையொப்பம் செய்ய சொன்னார்கள். நானும், எனது நண்பர் பழனிமுனியாண்டியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ-3 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்தில் இறந்து போன அசோக நம்பு என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். அதனால் நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை, பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.